தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

03.10.2012 A.M

## நவராத்திரிக்கு சென்னையில் புதுசு : மக்காச்சோளம் நாரில் இருந்து புடவை

அனகாபுத்தூர் : இயற்கை நார் ஆடைகள் உற்பத்தியில் பெயர் பெற்ற அனகாபுத்தூர் நெசவாளர்கள், மக்காச்சோளம் நாரில் இருந்து தயாரிக்கப்பட்ட புதிய ரக புடவையை, நவராத்திரியை முன்னிட்டு அறிமுகம் செய்துள்ளனர். அனகாபுத்தூரில் பாரம்பரியமாக நெசவு தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள், வாழை, கத்தாழை, சணல், பைன் ஆப்பிள் உள்ளிட்ட, 25 வகையான இயற்கை நார்களில் இருந்து ஆடை நெய்து அறிமுகப்படுத்தியுள்ளனர். இவை பெரும் வரவேற்பை பெற்றுள்ளன.

பண்டிகைகள் தோறும், புதிய ரக படைப்பை அறிமுகப்படுத்துவது, இந்த நெசவாளர்களின் வழக்கம். இந்த ஆண்டு நவராத்திரி பண்டிகையை முன்னிட்டு, மக்காச்சோள நாரில் இருந்து தயாரிக்கப்பட்ட புடவையை அறி

முகப்படுத்தியுள்ளனர். திருச்செங்கோட்டில் இருந்து பயிற்சிக்காக வந்த மாணவியர், இந்த புடவை யை வடிவமைத்து உள்ளனர்.

இது குறித்து நெசவாளர் சேகர் கூறியதாவது:

இயற்கை நார் ஆடைகளில் மக்காச்சோளம் நாரில் இருந்து, தயாரிக்கப்பட்ட இந்த புடவை புதிய ரகம். மக்காச்சோளம், லினன்,

கம்பளி, பருத்தி ஆகியவற்றின் கலவையாக இந்த புடவை

தயாரிக்கப்பட்டுள்ளது.

மழை, வெயில் என, இரண்டு காலநிலைகளிலும் இதை உடுத்தலாம். இதன் விலை 4,000 ரூபாய் என, நிர்ணயம் செய்துள்ளோம்.

இவ்வாறு சேகர் கூறினார்.

புடவையை அலங்காரமாக வடிவமைத்த மாணவி திவ்யா கூறியதாவது:

இயற்கை நார் ஆடைகள் குறித்து புராஜக்ட் செய்து வருகிறோம். இதில், மக்காச்சோளத்தில்

இருந்து நார் பிரித்தெடுத்து,
புடவையை தயாரித்துள்ளோம். இதற்கு நல்ல பலன் கிடைத்துள்ளது.
இந்த புடவையில் இன்னும் எம்பிராய்டிங், மணி, ஜிகினா என, மேலும் பல வகையில்
அழகூட்ட முடியும்.
இவ்வாறு திவ்யா கூறினார். உள்நாட்டை காட்டிலும் மெக்சிகோ, ஆஸ்திரேலியா போன்ற நாடு
களில் இருந்து, இயற்கை நார் ஆடைகளை விரும்புவதாக
நெசவாளர்கள் தெரிவித்தனர்.

## கண்டாச்சிபுரம் ஊராட்சியில்சிறப்பு கிராம சபா கூட்டம்

கண்டாச்சிபுரம்:கண்டாச்சிபுரம் ஊராட்சியில் காந்தி ஜெயந்தியை முன்னிட்டு சிறப்பு கிராம சபா கூட்டம் நடந்தது.கண்டாச்சிபுரம் ஊராட்சி அலுவலகத்தில் நடந்த கூட்டத்திற்கு, ஊராட்சித் தலைவர் கண்ணாயிரம் தலைமை தாங்கினார். துணைத்தலைவர் பாபு முன்னிலை வகித்தார்.கூட்டத்தில் தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள், வடகிழக்கு பருவ மழையை முன்னிட்டு முன்னெச்சரிக்கை ஏற்பாடுகள், வரலாற்று சின்னங்களை பாதுகாத்தல் குறித்து விவாதிக்கப்பட்டது.சைல்டு லைன் சேவை(தொலைபேசி எண்.1098) பற்றி திட்ட ஒருங்கிணைப்பாளர் முருகானந்தம் விளக்கினார். உதவி திட்ட அலுவலர் மணவாளன், மண்டலப் பார்வையாளர் அருட்செல்வி, பி.டி.ஓ.,க்கள் ஜோதி, தாமோதரன், கூடுதல் பி.டி.ஓ.,க்கள் சிவநேசன், நாராயணன், ஒன்றிய பொறியாளர் ராமலிங்கம் மற்றும் வார்டு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். ஊராட்சி செயலர் ஆனந்த் நன்றி கூறினார்.

## மண்புழு உரம் தயாரிக்க பயிற்சி கிராமசபையில் கலெக்டர் பேச்சு

நாமக்கல்: ""குப்பைகளை தரம் பிரித்து, திடக்கழிவு மேலாண் திட்டத்தை செயல்படுத்தும் வகையில், மண்புழு உரம் தயாரிக்க, மகளிர் சுயஉதவிக் குழுக்கள் முன் வந்தால், அதற்கான உரிய பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்யப்படும்," என, கிராமசபை கூட்டத்தில், நாமக்கல் மாவட்ட கலெக்டர் ஜகந்நாதன் பேசினார்.

நாமக்கல் அடுத்த சேந்தமங்கலம் யூனியன், பச்சுடையாம்பட்டி பஞ்சாயத்தில், கிராமசபை கூட்டம் நடந்தது. நாமக்கல் மாவட்ட கலெக்டர் ஜகந்நாதன் தலைமை வகித்து பேசியதாவது:நாமக்கல் மாவட்டத்தில், காந்திஜெயந்தியை முன்னிட்டு அனைத்து பஞ்சாயத்துகளிலும், கிராமசபை கூட்டம் நடக்கிறது. இக்கூட்டத்தில், சமூக பொருளாதாரம் மற்றும் ஜாதி கணக்கெடுப்பு

எடுக்கப்பட்டுள்ளதா, தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ், கடந்த ஆண்டு செய்யப்பட்ட பணிகள், இந்த ஆண்டு எடுக்கப்பட்டுள்ள பணிகள், அதற்கான மதிப்பீடுகள் குறித்த விபரங்கள், கிராமசபையில் வைக்கப்பட்டுள்ளது.பஞ்சாயத்தில், அனைத்து வீடுகளிலும், 4,200 ரூபாய் மானியத்தில் தனிநபர் இல்ல கழிப்பிடங்கள் அமைக்க வேண்டும். கிராம பஞ்சாயத்து பகுதிகளில் உள்ள குப்பைகளை தரம் பிரித்து திடக்கழிவு மேலாண் திட்டத்தை செயல்படுத்தும் வகையில், மண்புழு உரம் தயாரிக்க, மகளிர் சுயஉதவிக்குழுக்கள் முன் வந்தால், அதற்கான உரிய பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்யப்படும்.பச்சுடையாம்பட்டி பஞ்சாயத்தில், 51 பேர், முதியோர் உதவித்தொகை கேட்டு விண்ணப்பித்துள்ளனர். அவர்கள், வறுமைக்கோட்டுக்கு கீழ் உள்ளோர் பட்டியலில் இடம் பெறவில்லை என்பதால், அவர்கள் பெயரை, வறுமைக்கோட்டுக்கு கீழ் உள்ளோர் பட்டியலில் சேர்க்க, கிராமசபையில் ஒப்புதல் அளிக்க வேண்டும்.அரசு மூலம் கிராமங்களில் நடைபெறும் திட்டப்பணிகளை அனைத்தும், பொதுமக்களும் தெரிந்து கொள்வதற்காகவே, இந்த கிராமசபை கூட்டம் நடத்தப்படுகிறது. எனவே, பஞ்சாயத்து பகுதிகளில் உள்ள பொதுமக்கள், தங்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை நிறைவேற்றிட நடத்தப்படும் கிராமசபை கூட்டத்தில், பங்கேற்க வேண்டும்.இவ்வாறு அவர் பேசினார்.உதவி இயக்குனர் மலர்விழி, பஞ்சாயத்து தலைவர் அம்சவள்ளி, தாசில்தார் ராமசாமி, அரசு அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்பட பலர் பங்கேற்றனர்.

## பசுமை குடிலில் குடை மிளகாய் சாகுபடி

தர்மபுரி: பாலக்கோடு தாலுகா பகுதியில், பசுமை குடில் அமைத்து, விவசாயிகள் குடை மிளகாய் சாகுபடியில் இறங்கியுள்ளனர். குடை மிளகாய்க்கு நல்ல வரவேற்பு கிடைப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

தர்மபுரி மாவட்டம், விவசாயத்தை பிரதான தொழிலாளாக கொண்டது. இங்கு நெல், கரும்பு, வாழை உள்ளிட்ட பயிர்கள் அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகிறது. சீதோஷண நிலை மாற்றம், நீர் தட்டுப்பாடு உள்ளிட்ட காரணங்களால், விவசாயிகள் சில ஆண்டுகளாக மாற்று சாகுபடியில் ஈடுபட்டு வருகின்றனர்.தர்மபுரி, பாலக்கோடு தாலுகாவில் விவசாயிகள் சமீப காலமாக மாற்று பயிர்களுக்கு மாறத்துவங்கியுள்ளனர். பழைய தர்மபுரி, மாரண்டஹள்ளி மற்றும் பஞ்சப்பள்ளி பகுதியில், ஒரு சில விவசாயிகள் பசுமை குடில் அமைத்து குடை மிளகாய் சாகுபடி செய்கின்றனர். குறைந்த பராமரிப்பு, அரசு மானியம், அதிக விலைச்சல், போதிய விலை ஆகியவற்றின் காரணமாக குடைமிளகாய் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.குடை

மிளகாய் சாகுபடியில் செடி நட்ட, 60வது நாளில் இருந்து குடைமிளகாய் அறுவடைக்கு வருகிறது. குடை மிளகாய்க்கு வெளி மாவட்ட, மாநில சந்தைகளில் நல்ல வரவேற்பு இருந்ததால், தர்மபுரி மாவட்டத்தில் இருந்து குடை மிளகாய்களை விவசாயிகள் கடந்த சில ஆண்டுகளுக்கு முன் கோவை, கேரளா, பெங்களூரு, சென்னை உள்ளிட்ட பகுதிகளுக்கு அதிகளவில் அனுப்பி வந்தனர்.தர்மபுரி மாவட்டத்தில், சில மாதங்களாக, பெருகி வரும் பாஸ்ஃபுட் கடைகளாலும், பெண்கள் தங்களது வீட்டில் சமைக்கும், பல்வேறு உணவு வகைகளுக்கு குடைமிளகாயை பயன்படுத்த தொடங்கியதாலும், குடைமிளகாய் தேவை மாவட்டத்தில் அதிகரித்தது.இதனால், விவசாயிகள் அறுவடை செய்யும் குடைமிளகாய்களின் பெரும் பகுதியை தர்மபுரி மாவட்டத்தில் உள்ள சந்தைகளில் விற்பனை செய்ய தொடங்கினார்கள். கோவை, சென்னை மற்றும் பெங்களூரு ஆகிய சந்தைகளில் குடைமிளகாய் ஒரு கிலோ, 28 முதல், 35 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது.தர்மபுரி, பாலக்கோடு உள்ளிட்ட சந்தைகளிலும் குடைமிளகாய்க்கு அதே விலை கிடைக்கிறது. வெளியூர் சந்தைகளுக்கு குடை மிளகாய்களை கொண்டு செல்லும் வாடகை உள்ளிட்டவையுடன் ஒப்பிட்டால் தர்மபுரி மாவட்ட சந்தை விலையை விட குறைவாக உள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.அதனால், சில மாதங்களாக தர்மபுரி மாவட்டத்தில் உற்பத்தியாகும் குடை மிளகாய்களின் பெரும் பகுதி, இங்கு விற்பனை செய்யப்படுவதாகவும், அதன் மூலம் தங்களுக்கு போதிய வருவாய் கிடைப்பதாகவும் விவசாயிகள் தெரிவித்தனர்.

## விவசாயிகள் சபை கூட்டம்

கோபிசெட்டிபாளையம்: கீழ்பவானி முறை நீர் பாசன விவசாயிகள் சபை கூட்டம் நல்லாம்பட்டியில் நடந்தது.

பாசன சபை தலைவர் துரைசாமி தலைமை வகித்தார். பொதுப்பணித் துறை உதவி செயற்பொறியாளர் ராஜு முன்னிலை வகித்தார். "ஜெயம்' பிராணிகள் நல அறக்கட்டளை சார்பில், கால்நடைகளுக்கான மூலிகை சிகிச்சை குறித்த கையேடு வெளியிடப்பட்டது. கையேட்டை, பகிர்மான கமிட்டி தலைவர் செங்கோட்டையன் பெற்றுக்கொண்டார்.சோற்றுக் கற்றாழை, பிரண்டை, ஆடாதொடை, நெருஞ்சி, ஆவராம்பூ, வாழை இலை உள்ளிட்ட, 32 மூலிகைகள், சுக்கு, மிளகு, திப்பிலி, ஓமம், கடுக்காய், தேங்காய் உள்ளிட்ட, 15 சமையலறை பொருட்களைக் கொண்டு, கால்நடைகளுக்கு நோய் எதிர்ப்பு சக்தி வழங்கும் முறை, வேப்பிலை, சுண்டைக்காய், வேலிப்பருத்தி, பாகல் இலை, சிறியாநங்கை உள்ளிட்ட, 11 வகை மூலிகையை இடித்து, சாறு பிழிந்து, கால்நடைகளுக்கு கொடுப்பதன் மூலம், குடற்புழு, கோமாரி, தொண்டை

அடைப்பான், சப்பை நோய் உள்ளிட்ட தொற்று நோய்களை கட்டுப்படுத்தும் விதம், மடி வீக்கம், வயிற்று உப்புசம், கழிச்சல், காய்ச்சல் உள்ளிட்ட பல்வேறு நோய்களுக்கு கொடுக்க வேண்டிய மூலிகை மற்றும் பாரம்பரிய சிகிச்சை குறித்த விளக்கம் உள்ளது.பொதுப்பணித் துறை இளம் பொறியாளர் ராமசாமி, ஜெயம் அறக்கட்டளை தலைவர் கோவிந்தராஜ், கூட்டமைப்பு துணைத் தலைவர் வெங்கடாசலபதி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## சத்தியில் விளையும் பப்பாளி வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி

சத்தியமங்கலம்: சத்தியமங்கலம் பகுதியில் விளையும் "ரெட் லேடி' எனப்படும் பப்பாளிப்பழம், டெல்லி உள்ளிட்ட வெளிமாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.சத்தியமங்கலம் பகுதி விவசாயத்தை அடிப்படையாக கொண்டதாகும். இங்குள்ள விவசாயிகள் வாழை, கரும்பு, நெல் மற்றும் மஞ்சள் உள்ளிட்ட பயிர்களை விவசாயம் செய்த காலங்கள் மாறி, கடந்த சில ஆண்டுகளாக புது, புதுப்பயிர்களை பயிரிட்டு வருகின்றனர்.தற்போது சத்தியமங்கலம் பகுதியல் மல்லிகை பூ, உருளைக்கிழங்கு மற்றும் பப்பாளி ஆகிய பயிர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து வருகின்றனர். இதில் சத்தியமங்கலம் பகுதியில் உற்பத்தியாகும் மல்லிகை பூ பெங்களூரு, கேரளா மற்றும் மும்பை வரை தினமும் ஏற்றுமதி செய்யப்படுகிறது.இதேபோல் சத்தியமங்கலம் பகுதியில் விளையும் "ரெட் லேடி' என்ற வகையான பப்பாளியும், டெல்லி, ஆந்திரா, மகாராஷ்டா, அஸ்ஸாம் உள்ளிட்ட மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. "ரெட் லேடி' ரக பப்பாளி பழத்துக்கு மட்டுமே பயன்படுத்தப்படுகிறது. இந்த பழத்தில் பல்வேறு வகையான வைட்டமின்கள் உள்ளதால் உடல் நலத்துக்கு சிறந்தது என மருத்துவர்கள் சிபாரிசு செய்வதால் "ரெட் லேடி' பப்பாளிக்கு மவுசு அதிகரித்து வருகிறது."ரெட் லேடி' பப்பாளி பயிரிட்டுள்ள சத்தியமங்கலம் பெரியகுளம் விவசாயி நடராஜ் கூறியதாவது: "ஜிந்தா' என்ற வகையான பப்பாளி மட்டும் பாலுக்காக பயன்படுத்தப்படுகிறது. இந்த ரக பப்பாளி பால் மருத்துவத்துக்காக உற்பத்தி செய்யப்படுகிறது. "ரெட் லேடி' பப்பாளி ஒரு ஏக்கருக்கு ஆயிரம் நாற்றுகள் நடப்படுகிறது. நடவு செய்த ஏழு மாதங்களில் பலன் கொடுக்கிறது. ஆறு நாட்களுக்கு ஒரு முறை ஒரு ஏக்கருக்கு, இரண்டு டன் வரை விளைச்சல் கொடுக்கிறது.பலன் கொடுக்க துவங்கிய ஒரு ஆண்டுக்கு நல்ல மகசூல் கொடுக்கிறது, ரம்ஜான் சமயத்தில் ஒரு கிலோ "ரெட் லேடி' ரக பப்பாளி பழம், 18 ரூபாய் வரை விற்பனையானது. தற்போது இதன் விலை குறைந்து ஒரு கிலோ, ஆறு ரூபாய் வரை விற்பனையாகிறது. சத்தியமங்கலம் பகுதியில் பப்பாளி பயிருக்கு தகுந்த தட்பவெட்பம்

நிலவுவதால் மற்ற பகுதிகளை விட சத்தியமங்கலம் பகுதியில் விளையும் பப்பாளிக்கு ருசி அதிகமாக உள்ளது இவ்வாறு அவர் கூறினார்.

## மஞ்சள் வயலில் "சேனைகிழங்கு' ஊடுபயிர்

சத்தியமங்கலம்: சத்தியமங்கலம் பகுதியில் மஞ்சள் வயலுக்குள் சேனைகிழங்கு ஊடுபயிராக நடவு செய்துள்ளனர்.கடந்த, 2010ம் ஆண்டின் துவக்கத்தில் மஞ்சள் குவிண்டால், 17 ஆயிரம் ரூபாய் வரை விற்பனையானது. இதனால் சத்தியமங்கலம் மற்றும் பவானிசாகர் பகுதி விவசாயிகள் மஞ்சள் பயிர் அதிகமாக பயிரிட்டுள்ளனர். இந்த மஞ்சள் தற்போது நன்றாக வளர்ந்து கண்ணுக்கு குளுமையாக காட்சியளிக்கிறது.இந்த மஞ்சள் வயலில் விவசாயிகள் சிறிய வெங்காயம் ஊடுபயிராக நடவு செய்வது வழக்கம். தற்போது மஞ்சள் வயலில் சேனைகிழங்கு அதிகமாக ஊடுபயிராக பயிரிட்டுள்ளனர். ஒரு ஏக்கர் மஞ்சள் வயலில் முன்னூறு சேனைகிழங்கு செடிகள் நடவு செய்கின்றனர். மஞ்சள் நடவு செய்யும்போது சேனைகிழங்கும் உடன் நடவு செய்கின்றனர். பத்து மாதம் கழித்து மஞ்சள் அறுவடை செய்ய, மஞ்சள் செடியை அகற்றும்போது, சேனைகிழங்கு அறுவடை செய்துவிடுகின்றனர்.ஒரு ஏக்கர் மஞ்சள் வயலில் நடவு செய்யப்பட்ட சேனைகிழங்கு ஒரு டன் மகசூல் தருகிறது. சேனைகிழங்கு அறுவடை செய்யும் தருணத்தில் ஒரு கிலோ சேனைகிழங்கு, ஐந்து ரூபாய் வரை விற்பனையாகிறது. இதனால் மஞ்சள் வயலில் விவசாயிகளுக்கு கூடுதலாக வருமானம் கிடைப்பதால் ஊடுபயிருக்கு முக்கியதுவம் கொடுக்கின்றனர்.

## சம்பா சாகுபடிக்கு உரம்: 2,653 மெ.டன் வருகை

திருச்சி: சம்பா சாகுபடிக்காக ஒடிசா மாநிலத்திலிருந்து சரக்கு ரயில் மூலம், 2,653 மெட்ரிக் டன் டி.ஏ.பி., உரம் திருச்சிக்கு கொண்டு வரப்பட்டது.டெல்டா பாசன மாவட்டங்கள் மற்றும் அதனருகே இருக்கும் மாவட்டங்களில், சம்பா சாகுபடி துவங்கியுள்ளது. திருச்சி, கரூர், புதுக்கோட்டை, அரியலூர், பெரம்பலூர் ஆகிய மாவட்டங்களில் சம்பா சாகுபடி துவங்கியுள்ள நிலையில், விவசாயிகளுக்கு தேவையான டி.ஏ.பி., உரம், ஒடிசா மாநிலத்திலிருந்து சரக்கு ரயில் மூலம் நேற்று திருச்சி வந்தது.ரயிலில் வந்த, 2,653 மெட்ரிக் டன் டி.ஏ.பி., உரங்கள், லாரிகள் மூலம் அந்தந்த மாவட்ட கூட்டுறவு சங்கங்களுக்கு அனுப்பப்பட்டது. "விரைவில் ஓமன் நாட்டிலிருந்து யூரியா உரம் திருச்சி வர உள்ளதாக' இஃப்கோ முதுநிலை மண்டல மேலாளர் சுப்பிரமணியன் கூறினார்.

## உழவர் பாதுகாப்பு திட்ட சிறப்பு முகாம்

பெரம்பலூர்: தமிழக முதல்வரின் சீரிய திட்டமான உழவர் பாதுகாப்பு திட்டத்தின்கீழ், விவசாயிகளுக்கு நிவாரணம் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. இது குறித்து பெரம்பலூர் கலெக்டர் தரேஷ் அஹமது வெளியிட்ட அறிக்கை:பெரம்பலூர் மாவட்டத்தில், உழவர் பாதுகாப்பு திட்டத்தில் சேர தகுதியுள்ள அனைத்து விவசாயிகளிமிருந்து விண்ணப்பங்கள் பெற, அவர்கள் வசிக்கும் கிராமங்களிலேயே, நான்கு கட்டங்களாக சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டது. இந்த முகாம்களில் பட்டா மாறுதல், ரேஷன் கார்டு பெறுவது உள்ளிட்ட கோரிக்கை மனுக்களும் பெறப்பட்டன. மாவட்டத்தில் உள்ள பெரம்பலூர், குரும்பலூர், வெங்கனூர், பசும்பலூர், வாலிகண்டபுரம், வரகூர், வடக்கலூர், கீழப்புலியூர், கொளக்காநத்தம், செட்டிக்குளம் ஆகிய, பத்து குறுவட்டங்களிலும், நான்கு கட்டங்களாக உழவர் பாதுகாப்புத்திட்ட சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டது.பெரம்பலூர் தாலுகாவில், 2,182 மனுக்களும், குன்னம் தாலுகாவில், 5,629 மனுக்களும், வேப்பந்தட்டை தாலுகாவில், 3,611 மனுக்களும் பெறப்பட்டது. இந்த மனுக்களின் மீது விசாரணை செய்து, ஒரு மாத காலத்துக்குள் சம்மந்தப்பட்ட வி.ஏ.ஓ., கிராம நிர்வாக அலுவலகங்களில், மனுதாரர்களுக்கு தீர்வு தெரிவிக்கப்படும்.

## சம்பா சாகுபடியை முனைப்போடு செயல்படுத்த கலெக்டர் "அட்வைஸ்'

கும்பகோணம்: ""சம்பா சாகுபடியை விவசாயிகள் முனைப்போடு செயல்படுத்த, மக்கள் பிரதிநிதிகள் ஒத்துழைக்க வேண்டும்,'' என தஞ்சை கலெக்டர் பேசினார்.
கும்பகோணம் யூனியன் அலுவலகத்தில், யூனியன் கவுன்சிலர்கள் மற்றும் பஞ்சாயத்து தலைவர்களுக்கான சிறப்பு சம்பா தொகுப்புத் திட்டப் பயிலரங்கம் நடந்தது.தஞ்சை மாவட்ட வேளாண்மைத்துறை இணை இயக்குனர் முகமதுயாகியா வரவேற்றார். சிறப்பு சம்பா தொகுப்புத் திட்டம் குறித்து துணை இயக்குனர் ராமதாஸ், யூனியன் தலைவர் கோவி.மகாலிங்கம், துணைத்தலைவர் சின்னையன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.பயிலரங்கை துவக்கி வைத்து, தஞ்சை கலெக்டர் பாஸ்கரன் பேசியதாவது:தஞ்சை மாவட்டத்தில்,13 யூனியன்களில் சிறப்பு சம்பா தொகுப்பு திட்டம் நடத்தப்பட்டுள்ளது. நிறைவாக, கும்பகோணத்தில் பயிலரங்கம் நடத்தப்படுகிறது. கடந்த ஆண்டு, மேட்டூர் அணை ஜூன் மாதம், 6ம் தேதி திறக்கப்பட்டது. அப்போது நெல் உற்பத்தியும், மகசூலும் நன்றாக இருந்தது. குறுவை, சம்பா, தாளடி என, மூன்று பருவத்திலும் இலக்கை விட, ஆறு லட்சத்து, 40 ஆயிரம் மெட்ரிக் டன் கொள்முதல்

செய்யப்பட்டது.

தானே புயல் தாக்கிய போது கூட, தஞ்சை மாவட்டத்தில் பாதிப்பில்லை. அதே போல் இந்த ஆண்டும் நாம் நெல் விளைச்சலை அதிகப்படுத்த வேண்டும். தென்மேற்கு பருவமழை பொய்த்து விட்டதாலும், மேட்டூர் அணையிலிருந்து உரிய நேரத்தில் தண்ணீர் திறக்காத காரணத்தாலும், 40 ஆயிரம் ஹெக்டேரில் மேற்கொள்ளப்பட வேண்டிய குறுவை சாகுபடி, 23 ஆயிரத்து, 685 ஹெக்டேரில் மட்டுமே மேற்கொள்ளப்பட்டுள்ளது.சம்பாவில் நடப்பாண்டு, 1.5 லட்சம் ஹெக்டரில் நடவு செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலும் குறுவையில் மீதியுள்ள, 17 ஆயிரம் ஹெக்டரும், சம்பாவில் சாகுபடி செய்ய இருப்பதால், அதற்கு தேவையான விதை, உரங்களை மாவட்ட நிர்வாகம் இருப்பு வைத்து விற்பனை செய்து வருகிறது.

தற்போது மேட்டூரிலிருந்து தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. எனவே, சம்பாவில் நல்ல மகசூலை எடுக்க வேண்டும் என்பதற்காக, அரசு சிறப்பு சம்பா தொகுப்பு திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இதன் மூலம் சமுதாய நாற்றங்கால் அமைத்து, அவர் 20 சதவீத நாற்றுகளை எடுத்து கொள்ளலாம். மீதமுள்ள, 80 சதவீத நாற்றுகளை, மற்ற விவசாயிகளுக்கு கொடுக்க வேண்டும். இந்த திட்டத்தில், சமுதாய நாற்றங்கால் அமைப்பவருக்கு, 19 ஆயிரம் ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது.அதே போல், நேரடி நெல் விதைப்புத் திட்டம், இந்த திட்டத்தின் மூலம், தற்போது சாகுபடியை தொடங்கினால், அக்டோபர் பருவமழையில் பயிர்கள் நன்றாக வளர்ந்து விளைச்சலை அதிகரிக்கும். 1987ல், நவம்பர் 9ம் தேதி தான் மேட்டூர் அணை திறக்கப்பட்டது. அப்போது நேரடி நெல் விதைப்பை கையாண்டோம். அதில், நல்ல மகசூல் கிடைத்தது.இந்த திட்டத்தை மக்களிடம் முழுமையாக மக்கள் பிரதிதிகள் எடுத்து சொல்லத்தான், இந்த கூட்டம் நடத்தப்படுகிறது. எனவே, உணவு உற்பத்தியை நாம் பெருக்க வேண்டுமானால், சம்பா சாகுபடியை முனைப்புடன் செயல்படுத்திட மக்கள் பிரதிதிகளுடைய ஒத்துழைப்பும் தேவை.இவ்வாறு கலெக்டர் பேசினார்.

## கிராம சபை கூட்டம்

ஆண்டிபட்டி:எஸ்.எஸ்.புரம் ஊராட்சியில் கலெக்டர் பழனிசாமி தலைமையில் கிராம சபை கூட்டம் நடந்தது. ஊராட்சி தலைவர் மரியபுஷ்பம் வரவேற்றார். திட்ட அலுவலர் (பொறுப்பு) வடிவேல், ஊராட்சிகளின் உதவி இயக்குனர் முனியாண்டி முன்னிலை வகித்தனர். ஊராட்சியில் தேவையான அடிப்படைத்தேவைகள், தனி நபர் தேவைகள், அரசு உதவிகள் கேட்டு 200க்கும் மேற்பட்டவர்கள் மனு கொடுத்தனர்

### கிராமசபை கூட்டம்

வீரகேரம்புதூர்: ராஜகோபாலப்பேரி பஞ்.,சில் கிராமசபை கூட்டம் நடந்தது.காந்தி ஜெயந்தியை முன்னிட்டு கிராம சபை கூட்டம், வீரகேரளம்புதூரை அடுத்த காமராஜ் நகரில் நடந்தது. பஞ். தலைவர் ஜாண் தலைமை வகித்தார். வரும் நிதியாண்டிற்கான மகாத்மா காந்தி தேசிய வேலைவாய்ப்பு உறுதி திட்ட வேலைகள் குறித்து முடிவு செய்யப்பட்டது. காமராஜ் நகர் பகுதிக்க சிமென்ட் சாலை அமைக்க தீர்மானிக்கப்பட்டது.கூட்டத்தில் பஞ். துணைத்தலைவர் முருகன், உறுப்பினர்கள் ராஜ், ஞானப்பிரகாசம், ஜெயக்குமார், முத்தையா, ரீட்டா மற்றும் சுயஉதவிக்குழு உறுப்பினர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.பஞ்., செயலர் நவநீதகிருஷ்ணன் நன்றி கூறினார்.

## பரவலான மழையால் விவசாயிகள் நம்பிக்கை : நேரடி நெல் விதைப்பிற்கு தயார்

கடலூர் மாவட்டத்தில் பரவலாக மழை பெய்துள்ளதையடுத்து நெல் பயிரிடும் விவசாயிகளுக்கு நம்பிக்கை பிறந்துள்ளது.கடலூர் மாவட்டத்தில் காவிரி டெல்டா பகுதிகளான சிதம்பரம், காட்டுமன்னார்கோவில் பகுதிகளில் 1 லட்சத்து 40 ஆயிரம் ஏக்கரிலும், விருத்தாசலம், கடலூர், குறிஞ்சிப்பாடி பகுதிகளில் 1 லட்சத்து 30 ஆயிரம் ஏக்கரிலும் சம்பா போகத்திற்கு நெல் பயிரிடப்படுகிறது.கடந்த ஆண்டு தென்மேற்கு பருவமழை மூலம் போதியளவு தண்ணீர் இருப்பு இருந்ததால் குறிப்பிட்ட நேரத்தில் விவசாயிகள் நடவுப்பணியை துவக்கினர். மேலும் கடலூர் மாவட்டத்திற்குத் தேவையான தண்ணீரை கடந்த ஜூன் 27ம் தேதி கீழணையில் இருந்து திறந்து விடப்பட்டது. இதனால் அனைத்து பகுதிகளிலும் நடவுப்பணி ஜரூராக நடந்தது.ஆனால் இந்த ஆண்டு தென்மேற்கு பருவமழை போதியளவு இல்லாத காரணத்தால் காவிரி டெல்டா பகுதிகளில் நீர் வரத்து இல்லாமல் வாய்க்கால்கள் காய்ந்து கிடக்கின்றன.

14 மணி நேரம் மின் தடை

நமக்கு தண்ணீர் தரக்கூடிய கர்நாடக அரசும் கைவிரித்து விட்டதால் குறிப்பிட்ட நேரத்தில் நடவு செய்ய முடியாமல் விவசாயிகள் தவித்து வந்தனர். இந்நிலையில் நிலத்தடி நீர் உள்ள பகுதியில் விவசாயிகள் சேர்ந்து நாற்று விட்டு வளர்த்து பின்னர் நடவு செய்யும் பணியை (சமுதாய நாற்றங்கால் திட்டம்) அறிமுகம் செய்தது. இதற்கும் மின் மோட்டாரை இயக்கும் அளவுக்கு மின்சாரம் கிடைக்கவில்லை.

நாளொன்றுக்கு 14 மணிநேரம் மின்தடை இருப்பதாலும், இதே நிலை தொடர்ந்து

நீடிக்குமேயானால் நடவு செய்ய முடியாது என விவசாயிகள் நம்பிக்கை இழந்தனர். இத் திட்டத்தின்படி ஒரு சில இடங்களில் மட்டும் விவசாயிகள் சமுதாய நாற்றங்காலை பயன்படுத்தியுள்ளனர்.

நேரடி நெல் விதைப்பு

இந்நிலையில் இம்மாவட்டத்தில் பரவலாக பெய்து வரும் மழையை பயன்படுத்தி விவசாயிகள் நேரடி நெல்விதைப்பை துவக்கியுள்ளனர். குறிப்பாக காவிரி டெல்டா பகுதியில் பட்டத்தோடு பயிர் செய்ய வேண்டும் என்பதற்காகவும், எதிர் வரும் அக்டோபர், நவம்பர், டிசம்பர் ஆகிய மாதங்கள் மழைக்காலம் என்பதாலும் விவசாயிகள் நேரடி நெல் விதைப்பு பணியை மேற்கொண்டனர்.

அரசும் விவசாயிகளின் முயற்சிக்கு ஏற்றவாறு நேரடி நெல்விதைப்பு செய்த விவசாயிகளுக்கு உழவு, களைக்கொல்லி உள்ளிட்ட மானிய உதவியை வழங்கி வருகிறது.

வீராணம் நிரம்புகிறது.கடலூர் மாவட்டத்திலிலுள்ள காவிரி டெல்டா பகுதிகளான சிதம்பரம், காட்டுமன்னார்கோவில் பகுதிகளில் உள்ள நெற்பயிருக்கு கடந்த 30ம் தேதி கீழணையில் இருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. இந்த தண்ணீர் வடவாறு வழியாக நேற்று முன்தினம் வீராணம் ஏரியை வந்தடைந்தது. ஏரியில் இருப்பு உள்ள தண்ணீர், பருவமழை ஆகியவற்றைக் கொண்டு இந்த ஆண்டு சம்பா போக சாகுபடியை ஓரளவுக்கு செய்து விடலாம் என விவசாயிகள் மத்தியில் நம்பிக்கை பிறந்துள்ளது.

## சென்ற ஓராண்டு காலத்தில்...நாட்டின் காபி ஏற்றுமதி 3.21 லட்சம் டன்னாக சரிவு



மும்பை:சென்ற செப்டம்பருடன் முடிவடைந்த 2011-12ம் காபி பருவத்தில், நாட்டின் காபி ஏற்றுமதி, 8.54 சதவீதம் சரிவடைந்து, 3.21 லட்சம் டன்னாக குறைந்துள்ளது. இது, முந்தைய 2010-11ம் காபி பருவத்தில், 3.51 லட்சம் டன்னாக இருந்தது.

ரோபஸ்டா:உள்நாட்டில் காபி உற்பத்தி குறைந்ததால், அதன் ஏற்றுமதி சரிவடைந்துள்ளது. குறிப்பாக, ரோபஸ்டா காபி உற்பத்தி, முந்தைய பருவத்தை விட, சென்ற பருவத்தில் குறைந்துள்ளது.இத்துடன், காபி அதிகம் விளையும் கர்நாடகாவில், மழை பொழிவு குறைந்துள்ளதால், காபி உற்பத்தி 10 சதவீதம் குறையும் என, மதிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், இம்மாநிலத்தில் சிக்மகளூர், ஹசன் மற்றும் குடகு பிராந்தியத்தின் வடபகுதிகளில், காபி செடிகள் பூச்சி தாக்குதலால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாகவும், காபி உற்பத்தி, எதிர்பார்த்த அளவிற்கு இருக்காது என, இத்துறை சார்ந்தவர்கள் தெரிவித்தனர்.

பூச்சி தொல்லை:கர்நாடக மாநிலத்தில், காபி உற்பத்தி பாதிப்பிற்கு, வெள்ளை தண்டு துளைப்பான் எனப்படும் ஒரு வகை பூச்சிகள் முக்கிய காரணமாக உள்ளன. இந்த பூச்சிகளால், காபி செடிகளில் பூ பூப்பது தடைபடுகிறது. இதனால், ஒரு பருவத்தில், காபி தோட்டத்தில் மூன்று முறை களையெடுப்பு பணி மேற்கொள்ள வேண்டியுள்ளது.

இது, காபி உற்பத்தியாளர்களுக்கு பெருத்த இழப்பை ஏற்படுத்துகிறது.

பூச்சி தாக்குதலுக்கு ஆளான, காபி விளையும் பகுதிகளில், மூன்று முதல் ஐந்து ஆண்டுகள் வரை, காபி உற்பத்தி திறனும் குறைகிறது.கடந்த நான்கு ஆண்டுகளாக, கர்நாடகாவின் காபி விளையும் பகுதிகளில், இத்தகைய பூச்சிகளின் தொல்லை அதிகரித்துள்ளது. இது, காபி உற்பத்தியில் சரிவையும், இதன் காரணமாக, ஏற்றுமதி குறையவும் வழி வகுத்துள்ளது.

இத்தகைய பூச்சித் தாக்குதல் குறித்தும், அதை எவ்வாறு சமாளிப்பது என்பது பற்றியும், தேசிய காபி வாரியம் பல்வேறு விழிப்புணர்வு பிரசாரங்களை நடத்தி வருகிறது. மேலும், பூச்சி தடுப்பு சாதனங்களையும் விவசாயிகளுக்கு வழங்குகிறது.பூச்சித் தாக்குதலை கட்டுப்படுத்தினால், காபி உற்பத்தி அதிகரிக்கும் என்பதோடு, ஏற்றுமதியும் உயரும் என, காபி உற்பத்தியாளர்கள் தெரிவித்தனர்.

மதிப்பு உயர்வு:நாட்டின் காபி உற்பத்தி, சென்ற காபி பருவத்தில், அளவின் அடிப்படையில் குறைந்துள்ள போதிலும், மதிப்பின் அடிப்படையில், முந்தைய பருவத்தை விட, அதிகரித்துள்ளது.காபி வாரியம் வெளியிட்டுள்ள புள்ளி விவரத்தில், சென்ற பருவத்தில், ஒரு டன் காபி விலை, முந்தைய பருவத்தை விட, 12.03 சதவீதம் அதிகரித்து, 1.49 லட்சம் ரூபாயாக இருந்தது.

ரூபாய் மதிப்பில், சென்ற பருவத்தில் காபி ஏற்றுமதி, முந்தைய பருவத்தை விட, 2.12 சதவீதம் அதிகரித்து 4,800 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது.அதே சமயம், இது டாலர் மதிப்பின் அடிப்படையில், 7.10 சதவீதம் குறைந்து, 103 கோடி டாலரில் இருந்து, 95 கோடி டாலராக சரிவடைந்துள்ளது. நடப்பு 2012ம் ஆண்டு ஜனவரி முதல் செப்டம்பர் வரையிலான ஒன்பது மாதங்களில், நாட்டின் ஒட்டுமொத்த காபி ஏற்றுமதியில், அரபிகா பார்ச்மென்ட் காபியின் பங்களிப்பு 40,023 டன்னாக இருந்தது.

இது, சென்ற 2011ம் ஆண்டின், இதே காலத்தில், 38,690 டன்னாக இருந்தது.இதே காலத்தில், அரபிகா செரி வகை காபி ஏற்றுமதி, 9,771 டன்னில் இருந்து 11,357 டன்னாக அதிகரித்துள்ளது. அதே சமயம், இதே காலத்தில், ரோபஸ்டா பார்ச்மென்ட் காபி ஏற்றுமதி, 25,727 டன்னில் இருந்து, 21,575 டன்னாக குறைந்துள்ளது.அதே போன்று, ரோபஸ்டா செரி வகை காபி ஏற்றுமதியும், 1,38,799 டன்னில் இருந்து 1,21,223 டன்னாக சரிவடைந்துள்ளது. ஒட்டுமொத்த "இன்ஸ்டன்ட்' காபி ஏற்றுமதி, இதே காலத்தில் 72,914 டன்னில் இருந்து, 70,226 டன்னாக குறைந்துள்ளது.

## காவிரி பிரச்னையால் பட்டுக்கூடு விற்பனை பாதிப்பு



உடுமலை:தமிழக - கர்நாடக எல்லையில் நிலவும் பதற்றத்தால், உடுமலை பகுதியில் உற்பத்தியாகும் பட்டுக் கூடுகளை, விற்பனைக்கு எடுத்துச் செல்ல முடியாமல் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.உடுமலை, பொள்ளாச்சி மற்றும் சுற்றுப்பகுதிகளில், 2,800 ஏக்கரில், மல்பெரி பயிரிடப்பட்டு, வெண்பட்டுக்கூடுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

நாள்தோறும் சராசரியாக ஒரு டன், பட்டுக்கூடுகள் விற்பனைக்காக கர்நாடகா மாநிலத்திலுள்ள, ராம்நகருக்கு எடுத்து செல்வது வழக்கம்.இந்நிலையில், காவிரி பிரச்னையால் பட்டுக்கூடுகளை

கர்நாடகாவிற்கு விற்பனைக்கு எடுத்துச் செல்ல முடியவில்லை.

அறுவடை செய்யப்பட்ட பட்டுக்கூடுகளை மூன்று நாட்களுக்குள் விற்பனைக்கு அனுப்ப @வண்டும். எனவே, விவசாயிகள் பட்டுக் கூடுகளை, கோவை உள்ளிட்ட, பல்வேறு மையங்களில் விற்பனை செய்து வருகின்றனர்.

விவசாயி ராதாகிருஷ்ணன் கூறியதாவது:கர்நாடக மாநிலத்தில் பிரச்னை ஏற்படும் போது, பட்டுக்கூடுகளை விற்பனைக்கு எடுத்து செல்ல முடிவதில்லை. கோவை உள்ளிட்ட மையங்களில், முகவர்கள் வருகை குறைவாக இருக்கும். இதனால், கூடுகளுக்கு போதிய விலை கிடைக்காது. எனவே, இப்பிரச்னைக்கு நிரந்தர தீர்வாக உடுமலை பகுதியில், பட்டு வளர்ச்சி துறை சார்பி

## பூச்சி தாக்குதலால் மரவள்ளிக்கிழங்கு உற்பத்தி சரிவு



சேலம்:சேலம், நாமக்கல் மாவட்டங்களில், மாவுப் பூச்சி தாக்குதல் காரணமாக, மரவள்ளிக் கிழங்கு உற்பத்தி சரிவடைந்துள்ளது. மானாவாரி பயிராகவும், வயல்பாசனத்தின் மூலமாகவும், மர வள்ளிக்கிழங்கு அதிக அளவில், பயிரிடப்பட்டு வருகிறது. இதில், 60 சதவீதம் ஜவ்வரிசி தயாரிப்பதற்காக, சேகோ நிறுவனங்களுக்கு மொத்தமாக அனுப்பி வைக்கப்படுகிறது.மீதமுள்ள 40 சதவீத மரவள்ளிக்கிழங்கு, சிப்ஸ், பலகாரம் உள்ளிட்ட உணவு பொருட்கள் தயாரிக்க பயன்படுத்தப்படுகிறது.

நாமக்கல் மாவட்டம் சேலம், நாமக்கல் மாவட்டங்களில், மரவள்ளி உற்பத்தி சாகுபடி செய்யும் பரப்பு நாளுக்குள் நாள் சுருங்கி வருகிறது.மாவு பூச்சிகளின் தாக்கம், விலை நிர்ணயத்தில் நிலவும் குளறுபடி ஆகியவற்றால், மரவள்ளிக்கிழங்கின் உற்பத்தி வெகுவாக சரிந்து வருகிறது. பெரும்பாலான விவசாயிகள், குறிப்பாக சிறு மற்றும் குறு விவசாயிகள் மரவள்ளிக் கிழங்கை பயிரிட தயக்கம் காட்டி வருகின்றனர்.இதுகுறித்து ஐக்கிய விவசாயிகள் சங்க ஆலோசகர் வெற்றி

மணி கூறியதாவது:தமிழகத்தில் 300க்கும் மேற்பட்ட சேகோ ஆலைகள் உள்ளன. ஒவ்வொரு ஆண்டும், மரவள்ளிக்கிழங்குக்கு, ஆலை உரிமையாளர்கள் தான் விலை நிர்ணயம் செய்து வருகின்றனர். ஆனால், அது உற்பத்தி செலவிற்கு கூட போது மான தாக இல்லை. அதனால், கடந்த மூன்று ஆண்டுகளில், மரவள்ளிக் கிழங்கு உற்பத்தி, 50 சதவீதம் குறைந்து விட்டது. மேலும், கடந்த இரண்டு ஆண்டுகளாக, மாவு பூச்சியின் தாக்கத்தால், மரவள்ளிக் கிழங்குகளுக்கு கடுமையான பாதிப்பு ஏற்பட்டு வருகிறது. வேளாண்துறை அதிகாரிகள் மூலம், மாவு பூச்சியின் தாக்கத்தை கட்டுப்படுத்த, வழங்கப்பட்ட மருந்துகளால், பலன் கிடைக்கவில்லை.ஒரு மூட்டை மரவள்ளிக்கிழங்கு( 72 முதல் 76 கிலோ வரை) வெறும் 110 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது.

**குறைவான விலை:**அரசு 150 ரூபாய்க்கு மேல் விலை நிர்ணயம் செய்தும், சேகோ ஆலை உரிமையாளர்கள், தங்களுக்குள் "சிண்டிகேட்' அமைத்து கொண்டு, தொடர்ந்து குறைவான விலையை நிர்ணயம் செய்து வருகின்றனர்.கரும்பு, மரவள்ளி கிழங்கு ஆகியவற்றை குறிப்பிட்ட நாட்களுக்கு மேல் இருப்பு வைத்திருக்க முடியாது. அதனால், வேறு வழியில்லாமல், விவசாயிகள், மரவள்ளிக்கிழங்குகளை, ஆலை உரிமையாளர்கள் நிர்ணயிக்கும் விலைக்கு, வழங்கி வருகின்றனர். ஆண்டுக்கு ஒரு முறை, மரவள்ளிக் கிழங்கு தொடர்பாக, நடக்கும் முத்தரப்பு கூட்டத்தால், எந்த பலனும் ஏற்படுவதில்லை.

**மாற்றுத்தொழில்:**மரவள்ளி கிழங்கு விவசாயத்தில், தொடர்ந்து அடிமேல் அடி விழுந்து வருவதால், பெரும்பாலா ன விவசாயிகள், மரவள்ளிக் கிழங்கு பயிரிடுவதை விடுத்து, மாற்றுத் தொழில்களில் களம் இறங்கி விட்டனர். இவ்வாறு வெற்றிமணி கூறினார். மரவள்ளிக்கிழங்கு உற்பத்தியில்,50 சதவீதம் சரிவு ஏற்பட்டுள்ளதால், சில்லரை விற்பனையில் அதன் விலை உயர்ந்துள்ளது. தரமான ஒரு கிலோ மரவள்ளிக்கிழங்கு 25 ரூபாயில் இருந்து 30 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. ஆனால், தொடர்ந்து உற்பத்தி குறைந்தால், இதன் விலை 50 ரூபாய்க்கு மேல் உயர வாய்ப்புள்ளதாக வியாபா ரிகள் தெரிவிக்கின்றனர்.இன்னும் ஒரு மாதத்தில், மரவள்ளிக் கிழங்கு அறுவடை துவங்க உள்ளது. அதன் உற் பத்தியை பொறுத்தே,விலை இருக்கும். இருந்தபோதிலும், அதனால் தங்களுக்கு எந்த பயனும் இல்லை. இதனால், வியாபாரிகள் தான் பயனடைவர் என, பாதிக்கப்பட்ட விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

# விவசாய மலர் செய்தி

## முல்லை அரும்பாக மலரும் வெள்ளைப்பொன்னி




இன்று பச்சரிசிக்குப் பெயர் பெற்ற பல நெல் ரகங்கள் இருந்தாலும் விவசாயிகள் ஆவணி, புரட்டாசியில் வெள்ளைப் பொன்னியைத்தான் சாகுபடி செய்கிறார்கள். இதன் தரமான விதைகள் விவசாய இலாகாவில் கிடைக்கின்றது. சாகுபடி செய்பவர்களில் பலர் தங்களிடம் கறவை மாடுகள் வைத்திருப்பார்கள். காரணம் வெள்ளைப் பொன்னியின் வைக்கோல் பஞ்சு போல் இருப்பதாகும். கறவை மாடுகளுக்கு பசும்புல் போட்டாலும் வைக்கோலும் போடப்படுகிறது. வெள்ளைப் பொன்னி ரகம் இக்காரணத்தால் சாகுபடி செய்யப்படுகின்றது. மேலும் வெள்ளைப்பொன்னி அரிசி சிறந்த பச்சரிசியாகவும் உள்ளது. அரவையில் குருணை விழுந்தாலும் வெள்ளைப் பொன்னி தொடர்ந்து சாகுபடியில் உள்ளது. சமைத்தவுடன் அரிசி பால் வெண்மை நிறம் கொண்ட சோறாகின்றது. இதனால் விவசாயிகள் இந்த ரகத்தை முல்லை அரும்பாக மலரும் வெள்ளைப்பொன்னி என்று அழைக்கின்றனர். இந்த ரகம் எல்லா மண் வகைகளிலும் சாகுபடி செய்வதற்கு ஏற்றது. விவசாயிகள் களர் நிலத்திலும் இதை சாகுபடி செய்து பலன் அடைந்துள்ளனர். நாற்றின் வேர்கள் களர் தன்மையைத் தாங்கி நாற்று பச்சைகட்டி விடுகின்றது. வெள்ளைப் பொன்னியை சாகுபடி செய்ய 30 கிலோ விதை பயன்படுத்த வேண்டும். 8 சென்ட் பரப்பில் நாற்றங்கால் தயார் செய்து 20 கூடை மக்கிய தொழு உரம் இடவேண்டும். மேலும் 16 கிலோ டி.ஏ.பி. உரம் இடவேண்டும். நாற்று செழிப்பாக வரும். நடவு வயலுக்கு அதிக அளவு நன்கு மக்கிய இயற்கை உரம் இடவேண்டும். இதற்கு நான்கு ட்ரெய்லர் லோடு இயற்கை உரம் இடவேண்டும்.

விவசாயிகள் மரங்களின் தழைகளையும் சேற்றில் போட்டு மிதித்துவிடலாம். வெள்ளைப் பொன்னிக்கு இயற்கை உரங்கள் அதிகம் இட்டு ரசாயன உரத்தைக் குறைத்தால் பயிர் கீழே

சாயாது. மேலும் பயிர் பாதுகாப்பு செலவும் குறையும். வயலில் டிஏபி அரை மூடை மற்றும் பொட்டாஷ் அரை மூடை, யூரியா 5 கிலோ இவைகளை இடலாம். நடவு வயலில் சரியாக அண்டை வெட்டி சீராக சமன் செய்ய வேண்டும். சமன் செய்த நிலத்தில் ஏக்கரில் 12 கிலோ ஜிங்க் சல்பேட்டினை தேவையான ஆற்று மணலுடன் கலந்து வயலில் சீராகத் தூவ வேண்டும். உடனே நாற்றினை வயலில் வரிசை நடவு போடவேண்டும். வரிசைக்கு வரிசை 9 அங்குலமும் வரிசையில் குத்துக்கு குத்து 9 அங்குலமும் இடைவெளி விட்டு 30 நாட்கள் வயதுடைய நாற்றினை குத்துக்கு இரண்டு நாற்றுக்கள் வீதம் நடவேண்டும். இவ்வாறு செய்தால் சாயும் தன்மை கொண்ட பயிரை வயலில் சாயாமல் நிற்க செய்யலாம். இதனால் கதிர்கள் வாளிப்பாக வரும். மகசூலும் அதிகம் கிடைக்கும். நட்ட பயிருக்கு இரண்டு முறை களையெடுக்க வேண்டும். நடவு நட்ட 25 நாட்களுக்கு பிறகு மேலுரமாக யூரியா 15 கிலோ, பொட்டாஷ் 15 கிலோ, வேப்பம் புண்ணாக்கு 3 கிலோ இடவேண்டும். சாகுபடி சமயம் பயிரை கண்காணித்து பூச்சி, வியாதிகள் வராமல் தடுக்க வேண்டும். இம்மாதிரியாக சாகுபடிசெய்தால் ஏக்கரில் 25 மூடைகள் (மூடை 75 கிலோ) மகசூலாகக் கிடைக்கும். மூடைக்கு விலை ரூ.675 வரை கிடைக்கும். நியாயமான விலை ரூ.750 இருந்தாலும் வியாபாரிகள் இந்த விலையைக் கொடுக்க மாட்டார்கள். விவசாயிகள் வைக்கோல் விற்பனையிலும் ரூ.1,125 வரை பெறமுடியும். வெள்ளைப் பொன்னி சாகுபடியில் செலவு போக நிகர லாபமாக ரூ.8000 வரை பெறமுடியும்.

வெள்ளைப்பொன்னியை காஞ்சிபுரம், செங்கல்பட்டு பகுதி விவசாயிகள் புரட்டாசியிலும் நாற்று விட்டு நடலாம். இப் பட்டத்தில் சாகுபடி செய்பவர்களது இளம்பயிர் ஐப்பசி - கார்த்திகை பட்டத்தில் பெய்யும் மழையில் மாட்டிக் கொள்ளும். இருப்பினும் தீங்கு எதுவும் ஏற்படுவது இல்லை. இளம் பயிர்களது மகசூல் திறன் அதிகரிக் கின்றது. இதனால் நல்ல மகசூல் கிடைக்கின்றது. மேலும் நல்ல அனுபவம் பெற்ற இப்பகுதி விவசாயிகள் பயிர் தொண்டைக்கதிர் பருவம் வரும்போது ஒரு கிராம் பவிஸ்டின் மருந்தினை ஒருலிட்டர் நீரில் கலந்து தெளித்து பூஞ்சாள நோய் வராமல் தடுத்துவிடுகின்றனர். இந்த சிகிச்சைக்குப்பின் நெல்மணிகள் சவரன் நிறத்தை அடைகின்றது. இந்த விவசாயிகள் இயற்கை உரங்களோடு உயிர் உரங்களையும் (அசோஸ் பைரில்லம், பாஸ்போ பேக்டீரியா) உபயோகப் படுத்துகின்றனர்.

**விவசாயிகள் கவனிக்க:**

வெள்ளைப்பொன்னி சிறந்த பச்சரிசி ரகம். அரிசி பச்சரிசியாக இருந்தாலும் புழுங்கல் அரிசியாக இருந்தாலும் கலர் மங்கலாக இருக்காமல் வெண்மையாக இருப்பது குறிப்பிடத்தக்கது. சாகுபடியில் வெற்றியடைவது விவசாயிகளது திறமையைப் பொருத்து இருப்பதால் விவசாயிகள் திறமையாக செயல்பட வேண்டும்.

**-எஸ்.எஸ்.நாகராஜன்**

## நவீன தொழில்நுட்பம்

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழக வீரிய ஒட்டு நெல் கோ.4 விதை உற்பத்தியில்

**விவசாயியின் சாதனை:**

2011-12ம் ஆண்டில் ஈரோடு மாவட்டம், மாதாம்பாளையம் விவசாயி வெங்கிடு வீரிய ஒட்டுநெல் விதை உற்பத்தியில் சாதனை படைத்துள்ளார். வீரிய ஒட்டு நெல்லின் "தாயாதி விதைகள்' "கோ.எம்.எஸ்.23ஏ ஆறு கிலோவும் (பெண்), சி.பி.174 (ஆண்) 4 கிலோவும் வழங்கப்பட்டது. முதல் நாள் 2 கிலோ சி.பி.174 ஆண் ரகத்தை நன்கு சமன் செய்யப்பட்ட நாற்றங் காலில் பரவலாக விதைத்தார். 5 நாட்களுக்குப் பிறகு இரண்டாம் பகுதியாக 2 கிலோ சி.பி.174 ஆண் ரகத்தையும் 6 கிலோ பெண் ரகத்தையும் விதைத்தார். ஏனைய நெல் நாற்றங்காலைப் போலவே பராமரித்து நாற்றின் வயது 22-25 நாட்கள் ஆனதும் நடவு வயலில் 6 வரிசை பெண் நாற்றுக்கு, 2 வரிசை ஆண் நாற்றுக்கு என்ற விகிதத்தில் காற்றடிக்கும் திசைக்கு குறுக்காக நடவு செய்தார். முதல் விதைப்பு நாற்றுக்களை முதல் வரிசையிலும் இரண்டாம் விதைப்பு ஆண் நாற்றுக்களை இரண்டாம் வரிசையிலும் நடவுசெய்து வரிசைக்கு வரிசை 30 செ.மீ., நாற்றுக்கு நாற்று 30 செ.மீ. இடைவெளி விடப்பட்டது.

ஆண் வரிசைக்கும் பெண் வரிசைக்கும் இடையே 20 து 20 செ.மீ. என்ற இடைவெளியில் நடப்பட்டன. அதாவது நாற்றுக்கு நாற்று 20 செ.மீ. இடைவெளியும், வரிசைக்கு வரிசை 20 செ.மீ. இடைவெளியும் கொண்டு குத்துக்கு ஒரு நாற்று வீதம் நடவு செய்யப்பட்டது.

பயிர் பாதுகாப்பு, களைக்கட்டுப்பாடு, நீர்ப்பாசனம் ஆகியவற்றை இதர நெல் ரகங்களுக்கு பரிந்துரைப்பதையே பின்பற்றினார். பின்னர் முதல் மேலுரமாக எக்டருக்கு 82.5 கிலோ யூரியாவுடன் 25 கிலோ மியூரியேட் ஆப் பொட்டாஷ் தூர்கட்டும் பருவத்தில் இட்டார். இதே அளவு உரங்களை இரண்டாவது மேலுரமாக கதிர் உருவாகும் சமயத்தில், 3வது மேலுரமாக பூக்கும் தருணத்தில் இட்டார்.

கலப்பு செடிகளை ஒவ்வொரு வரிசையிலும் செடிகள் நட்ட முதலில்இருந்தே அகற்றிவிட்டுள்ளார். பூக்கும் பருவத்தில் மகரந்தம் கொட்டும் செடிகள் மாற்றுப் பாதைகளைக் கொண்ட செடிகளை கண்காணித்து தூரோடு அகற்றினார்.

முக்கிய தொழில்நுட்பங்களான ஆண் பெண் ரகங்கள் ஒரே சமயத்தில் பூக்க வேண்டும். அல்லது பெண் ரகம் இரு நாட்களுக்கு முன்பாக பூக்க வேண்டும். பூக்கும் தருணத்தில் தழைச்சத்து கொண்ட யூரியா போன்ற ரசாயன உரங்களை மேலுரமாக இடுவதாலும் அல்லது யூரியா கரைசல் தெளிப்பதாலும் 3 முதல் 4 மாதங்கள் வரை பூக்கும் பருவத்தைத் தாமதப்படுத்தலாம். 20 கிராம் குருணையை ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து 2 சதவீதக் கரைசலை தயாரிக்கலாம். இதே போல் 2 சதவீத டி.ஏ.பி. கரைசலைத் தெளிப்பதால் 2 முதல் 3 நாட்கள் முன்பாக பூக்கச் செய்யலாம். மேலும் வயலில் உள்ள தண்ணீரை வடிப்பதன் மூலம் ஆண் ரகத்தில் பூக்கள் மலர்வதைத் தாமதப்

படுத்தவும் முடியும்.
பெண் ரகத்தில் கதிர் முழுமையாக கண்ணாடி இலை உறையைவிட்டு வெளியே வராது. கதிர்கள் நன்கு வெளிவரச்செய்ய 10 முதல் 15 சதம் செடிகள் பூக்கும் தருணத்தில் 15 கிராம் ஜிப்ரலிக் அமிலத்தை ஏக்கருக்கு 200 லிட்டர் தண்ணீரில் கலந்து ஒரு முறையும், 24 மணி நேரம் கழித்து 15 கிராம் ஜிப்ரலிக் அமிலத்தை ஏக்கருக்கு 200 லிட்டர் தண்ணீரில் கலந்து இரண்டாவது முறையும் தெளித்தார். ஜிப்ரலிக் அமிலம் எளிதாக தண்ணீரில் கரையாது. எனவே 1 கிராம் தூளை 10 மிலி எரிசாராயத்தில் கரைத்து பின் தண்ணீரில் கலந்து தெளித்தார்.
அயல் மகரந்த சேர்க்கையை அதிகப்படுத்த காலையில் 10 மணி முதல் 11 மணி வரை நீண்ட கயிறை பயிர்களின் கதிர் மட்டத்தில் 4 முறை அல்லது 5 முறை ஆண் வரிசைக்கு நேர் கோட்டில் வளைவு கொடுத்து இழுக்கப்பட்டது. இதுபோல் 10 நாட்களுக்கு மகரந்தச் சேர்க்கை ஊக்குவிக்கப்பட்டது. காற்று இருந்தால் இவ்வாறு செய்ய வேண்டியதில்லை. பொதுவாக ஆண் பயிரில் 10 முதல் 20 சதம் நெல்மணிகள் மட்டுமே பிடிக்கும். ஆனால் சரியான விதை உற்பத்தி தொழில்நுட்பத்தை கடைபிடித்தால் விதை பிடிப்பு சுமார் 60 சதவீதம் இருக்கும்.
நெல்மணிகள் முற்றியபின் ஆண் ரகம் முதலில் அறுவடை செய்யப் பட்டது. பெண் வரிசைகள் விடுபட்ட கலவன்களை அகற்றிவிட்டு பிறகு அறுவடை செய்தபின் தூய்மையான விதைகள் களத்தை நன்கு சுத்தப்படுத்தி தனியாக அடித்து காயவைக்கப்பட்டது. இவ்வாறு பெண் வரிசைகளிலிருந்து கிடைக்கும் விதைகள் வீரிய ஒட்டுநெல் விதைகளாகும்.
வீரிய ஒட்டு நெல் விதைகள் கிலோ ரூ.110க்கு துறையிலிருந்து விலைக்கு வாங்கிக் கொள்ளப்பட்டது. ஏக்கருக்கு வீரிய ஒட்டு நெல் விதை 800 கிலோ கிடைத்துள்ளது. ஆண் நெல் ரகத்திலிருந்து 1350 கிலோ விதையும், 3500 கிலோ வைக்கோலும் கிடைத்துள்ளது. மொத்த சாகுபடி செலவு ரூ.24,796. மொத்த வரவு ரூ.1,05,000/- நிகர லாபம் ஏக்கருக்கு 80,204.
தொடர்புக்கு:

**முன்னோடி விவசாயியின் முகவரி:**
எஸ்.பி. வெங்கிடுசாமி, 29, ஊர்க்கவுண்டர் தோட்டம், வரதம்பாளையம், சத்தியமங்கலம். (தகவல்: முனைவர் க.மனோன்மணி, முனைவர் ச.ராஜன், க.தியாகராஜன், நெல் இனவிருத்தி நிலையம், த.வே.ப.கழகம், கோவை-641 003. போன்: 0422-247 4967)
**-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்**

## மானாவாரி தொழில்நுட்பத்தில் இயற்கை விவசாயி



தூத்துக்குடி மாவட்டம் எட்டயபுரம் அருகே சின்னமலைக்குன்று என்ற ஊரைச் சேர்ந்த முன்னோடி பண்ணையாளர் சென்னகேசவன் (98423 48915). இவர் 30 ஆண்டுகளுக்கும் மேலாக வேளாண்மையில் ஈடுபட்டு வருபவர். பல புதிய எளிய முறைகளை அறிமுகம் செய்பவர். ஆடு வளர்ப்பிலும், பண்ணைக்குடில் அமைப்பதிலும் அனுபவம் உள்ளவர்.

மானாவாரி விவசாயம்தான் மற்ற எல்லா வகை விவசாயத்தை விடவும் லாபகரமானது. வரவுசெலவு கணக்குப் பார்த்தால் நஞ்சையிலோ, தோட்டக்கால் விவசாயத்திலோ நாம் செலவழித்ததுகூட வருவதில்லை. ஆனால் மானாவாரி வேளாண்மையில் செலவுகள் மிகவும் குறைவு. வரவும் நன்றாகவே உள்ளது. ஆனால் இதை முறையாகச் செய்ய வேண்டும். முறை தவறிச் செய்தால் நமக்கு வருமானம் கிடைக்காது.

மானாவாரி தொழில் நுட்பத்தின் முதல் அடிப்படை நமது பகுதியின் மழை அளவு. எவ்வளவு மழை எப்போதெல்லாம் பெய்கிறது என்ற தகவல் திரட்டு நம்மிடம் இருக்க வேண்டும். நான் கடந்த 35 ஆண்டுகளுக் குரிய எங்களது பகுதிக்கான மழை அளவுப் பட்டியலை வைத்துள்ளேன்.

ரெயின்பால் எனப்படும் மழைப்பொழிவு இடத்திற்கு இடம் மாறுபடுகிறது. இதேபோல காலமும் மாறு படுகிறது. ஆனால் ஒரு இடத்தில் பெய்யும் மழையின் முறையானது கிட்டத்தட்ட தவறாமல் ஆண்டுதோறும் இருக்கிறது.

நீண்டநாள் பயிர்களையும் தேர்வு செய்யலாம். குறுகிய காலப் பயிர்களையும் தேர்வு செய்யலாம். நமது மண்ணின் நீர்பிடிப்புத் தன்மை, மழை அளவு ஆகியவற்றை வைத்து நாம் பயிர்களைத் தேர்வு செய்ய வேண்டும். நீண்டகாலப் பயிர்களான பருத்தி, மிளகாய் போன்றவற்றை நாம் தேர்வு

செய்யும்போது மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும். குறுகிய காலப்பயிர்களான பாசி, உளுந்து போன்றவற்றை தேர்வுசெய்து சாகுபடிசெய்வதால் சிக்கல் வருவது இல்லை.

நேரடி விதைப்பைத் தவிர்ப்பது நல்லது. மாட்டை வைத்து கொறுக்கலப்பை கொண்டு விதைகளை நேருக்கு நேராகப் போடவேண்டும். டிராக்டர் கொண்டு போடும்போது விதை மேலாக விழுந்துவிடும் அல்லது முளைக்க முடியாத ஆழத்தில் சென்றுவிடும். இதனால் முளைப்புத்திறன் குறைந்துவிடுகிறது. விதைநேர்த்தி கட்டாயம் செய்யவேண்டும். ஆவூட்டத்தில் ஊறவைத்து விதைநேர்த்தி செய்யும்போது மிகவும் பயன் கிட்டுகிறது. விரைவில் முளைக்கிறது.

கடைபிடிக்க வேண்டிய மண்வள நுட்பங்கள் - பெய்யும் மழை நீர், நிலத்தை விட்டு வெளியேறாமலும் அதே சமயம் வரப்புகள் உடையாமல் இருக்கும்படியாகவும் சம மட்ட வரப்புகள் அமைக்க வேண்டும். இதனால் சத்தான மண் அடித்துச் செல்லாமல் பாதுகாக்கப் படுகிறது. இதற்கடுத்ததாக வடிகால்களும் வாய்க்கால்களும் சீராக அமைக்க வேண்டும். அதாவது வரத்து நீருக்கும், போக்கு நீருக்கும் இடம் கொடுக்க வேண்டும். அடுத்ததாக சரிவுக்குக் குறுக்காக உழவேண்டும். சித்திரை மாதம் பெய்யும் மழையை விட்டுவிடாமல் உழுதுவைக்க வேண்டும். வரப்புகளை ஆண்டுதோறும் பலப் படுத்தி வரவேண்டும். பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு மூலிகைப் பூச்சிவிரட்டிகள் பயன்படுத்த வேண்டும்.

**-கே.சத்தியபிரபா, உடுமலை.**

இன்றைய வேளாண் செய்திகள்

03.10.2012 A.M

## விவசாயிகள் மாநாடு: சோனியா பங்கேற்பு

குஜராத் மாநிலத்தில் புதன்கிழமை நடைபெறவுள்ள விவசாயிகள் மாநாட்டில் சோனியா காந்தி பங்கேற்கிறார்.

குஜராத் மாநிலம் ராஜ்கோட்டில் காங்கிரஸ் கட்சி சார்பில் விவசாயிகள் மாநாடு புதன்கிழமை நடைபெறுகிறது. இதில் சோனியா காந்தி பங்கேற்கவுள்ளதால், பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. இது குறித்து அதிகாரி ஒருவர் கூறியது: ஆயிரத்துக்கும் அதிகமான போலீஸôர், சோனியா காந்தி வரும் சாலைகளில் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். சிறப்புப் பாதுகாப்புப் படையினர் மாநாடு நடக்கும் இடத்துக்கு வரவழைக்கப்பட்டுள்ளனர். காந்தியடிகள் பள்ளிப்பருவத்தில் தங்கியிருந்த இடத்தை,சோனியா காந்தி பார்வையிடவுள்ளார் என்றார் அந்த அதிகாரி.

தினகரன்

இன்றைய வேளாண் செய்திகள்

03.10.2012 A.M

## கர்நாடகா திறந்த தண்ணீர் மேட்டூர் அணைக்கு வந்தது



பென்னாகரம் : கர்நாடக அணைகளிலிருந்து திறந்து விடப்பட்ட தண்ணீர் நேற்று மேட்டூர் அணைக்கு வந்து சேர்ந்தது. டெல்லியில் கடந்த மாதம் 19ம் தேதி நடந்த காவிரி நதி நீர் ஆணைய கூட்டத்தில், தமிழகத்திற்கு செப்டம்பர் 20ம் தேதி முதல் அக்டோபர் 15ம் தேதி வரை, விநாடிக்கு 9 ஆயிரம் கன அடி தண்ணீர் திறந்து விட வேண்டுமென கர்நாடக அரசுக்கு பிரதமர் உத்தரவிட்டார். கர்நாடக முதல்வர் ஜெகதீஷ் ஷெட்டர் அதனை ஏற்க மறுத்து விட்டார்.

இதையடுத்து தமிழக அரசு தொடர்ந்த வழக்கில், பிரதமரின் உத்தரவை மதித்து தமிழகத்திற்கு தண்ணீர் திறந்து விட வேண்டும் என்று கர்நாடக அரசுக்கு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது. இந்நிலையில், சனிக்கிழமை நள்ளிரவு முதல் கிருஷ்ணராஜ சாகர் மற்றும் கபினி அணைகளில் இருந்து விநாடிக்கு 9,000 கன அடி தண்ணீர் காவிரியில் திறந்து விடப்பட்டது. கபினி அணையிலிருந்து 5,000 கன அடியும், கிருஷ்ணராஜ சாகர் அணையில் இருந்து 4,000 கனஅடியும் திறந்து விடப்பட்டது. இதையடுத்து கபினி அணையிலிருந்து 190 கி.மீ தூரத்தில் உள்ள தமிழக

எல்லைக்கு நேற்று அதிகாலை தண்ணீர் வந்து சேரும் என பிலிகுண்டுலுவில் உள்ள மத்திய நீர் அளவீட்டு ஆணைய அலுவலக அதிகாரிகள் தெரிவித்திருந்தனர்.

அதன்படி நேற்று அதிகாலை 4 மணிக்கு பிலிகுண்டுலுவுக்கு தண்ணீர் வந்து சேர்ந்தது. காலை முதல் மத்திய நீர் ஆணைய அலுவலக அதிகாரிகள் பிலிகுண்டுலு பகுதியில் காவிரியாற்றில் நீர்வரத்து குறித்து அளவீடு செய்யும் பணியில் ஈடுபட்டனர். மதியம் 1 மணி நிலவரப்படி, பிலிகுண்டுலு பகுதியில் காவிரி ஆற்றில் விநாடிக்கு 10,700 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது.

இந்த தண்ணீர் நேற்று பகல் 11 மணியளவில் மேட்டூர் அணைக்கு வந்து சேர்ந்தது. நேற்று மாலை 4 மணி நிலவரப்படி மேட்டூர் அணைக்கு நீர்வரத்து 9222 கனஅடியாக இருந்தது. அணையில் இருந்து காவிரி டெல்டா பாசனத்துக்கு விநாடிக்கு 13701 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. அணையின் நீர்மட்டம் 72.64 அடியாக இருந்தது. நீர் இருப்பு 35.01 டிஎம்சி.

பஸ் நிறுத்தம்: மேட்டூரில் இருந்து பாலாறு வழியாக கொள்ளேகால், மாதேஸ்வரன் மலை, மைசூர் உள்ளிட்ட பகுதிகளுக்கு இயக்கப்படும் பேருந்துகள் நிறுத்தப்பட்டுள்ளன. 2 தனியார் பேருந்துகள் உள்ளிட்ட 21 பேருந்துகள் இந்த பகுதியில் இயங்கி வருகிறது. இவை 29ம் தேதி நள்ளிரவு முதல் ஒட்டுமொத்தமாக நிறுத்தப்பட்டது.

இன்றைய வேளாண் செய்திகள்
03.10.2012 A.M

**பனமரத்து பட்டி பகுதியில் நிலக்கடலை விளைச்சல் கடும்பாதி பு அரளி பூ உற்பத்தியில் ஆர்வம் காட்டும் விவசாயிகள்**

பனமரத்து பட்டி பகுதியில் நிலக்கடலை விளைச்சல் பாதி பு அடைந்துள்ளதால் விவசாயிகள் அரளி பூ உற்பத்தியில் ஆர்வம் காட்டி உள்ளனர்.

நிலக்கடலை உற்பத்தி

சேலம் மாவட்டம் பனமரத்து பட்டி மற்றும் அதனை சுற்றி உள்ள அடிகரை நல்லியாம்புதூர், தி பம்பட்டி, குரால்நத்தம், தும்பல்பட்டி, சாமகுட்ட பட்டி உள்ளிட்ட 20—க்கும் மேற்பட்ட கிராமங்களில் உள்ள விவசாயிகள் தங்கள் நிலங்களில் நிலக்கடலை உற்பத்தி செய்து வருகின்றனர். இந்த பகுதியில் சில ஆ டுகளுக்கு முன்பு வரை சுமார் 3 ஆயிரம் ஏக்கர் பர பளவில் நிலக்கடலை பயிரிட பட்டிருந்தது.

ஆனால் தற்போது வறட்சி, ஆட்கள் பற்றாக்குறை, உற்பத்தி செலவு அதிகரி பு போன்ற காரணங்களால் விவசாயிகள் நிலக்கடலை சாகுபடி தொழிலை கைவிடுகின்றனர். இந்த ஆ டு சுமார் 300 முதல் 500 ஏக்கர் பர பளவில் மட்டுமே நிலக்கடலை பயிரிட பட்டு அறுவடை செய் ம் பணிகள் நடந்து வருகிறது.

அரளி பூ உற்பத்தி

மேலும் பல விவசாயிகள் நிலக்கடலை உற்பத்தி தொழிலில் இருந்து விலகி, அரளி பூ உற்பத்தியில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இதுகுறித்து பெ விவசாயி ஜெயமணி கூறியதாவது:—

கடந்த 4, 5 ஆ டுகளுக்கு முன்பு வரை நிலக்கடலை சாகுபடி எங்களுக்கு நல்ல வருமானத்தை ஈட்டி தந்தது. ஆனால் தற்போது இதே நிலக்கடலை பல விவசாயிகளுக்கு நஷ்டத்தை ஏற்படுத்தும் நிலை ஏற்பட்டு இருக்கிறது. ஒவ்வொரு ஆ டும் வைகாசி அல்லது ஆனி மாதத்தில் நிலக்கடலைகளை நிலத்தில் பயிரிட்டு புரட்டாசி மாதம் முதல் அறுவடை பணிகளில் ஈடுபடுவது வழக்கம்.

இந்த இடை பட்ட காலத்தில் பெய் ம் மழையை பொறுத்தே நிலக்கடலை விளைச்சல் இருக்கும். ஆனால் இந்த ஆ டு பருவமழை பொய்த்து போனதால் கடந்த ஆ டுகளை விட விளைச்சல் கடுமையாக பாதிக்க பட்டுள்ளது.

மேலும் பயிறுகள் வளர்ந்து வரும் போது களை பறிக்கவும், அறுவடை செய்வதற்கும் போதுமான அளவு கூலி ஆட்களை கிடை பதில்லை. உரம், பூச்சி மருந்துகள் உள்ளிட்டவைகளின் விலை ம் அதிகரித்து உள்ளது. நிலக்கடலைக்கு நல்ல விலை கிடைக்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வே டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

**சு ரீம் கோர்ட்டு உத்தரவுபடிகர்நாடக அணைகளில் திறக்க பட்ட த ணீர் மேட்டூர் அணைக்கு வந்தது வினாடிக்கு 9 ஆயிரம் கனஅடி வீதம் த ணீர் வருகிறது**

சு ரீம் கோர்ட்டு உத்தரவுபடி கர்நாடக அணைகளில் திறக்க பட்ட த ணீர் மேட்டூர் அணைக்கு வந்து சேர்ந்தது. அணைக்கு வினாடிக்கு 9 ஆயிரம் கனஅடி வீதம் த ணீர் வருகிறது.

ர்வரத்து குறைந்தது

தென்மேற்கு பருவமழை தவறியதால் மேட்டூர் அணைக்கு இந்த ஆ டு ர்வரத்து குறைந்தது. இதன் காரணமாக டெல்டா பாசனத்திற்கு த ணீர் திறக்க பட வே டிய நாளான ஜூன் 12–ந் தேதி மேட்டூர் அணை திறக்க படவில்லை.

இதற்கு மாறாக 90 நாட்கள் காலதாமதமாக கடந்த மாதம் 17–ந் தேதி மேட்டூர் அணையில் இருந்து டெல்டா பாசனத்துக்கு த ணீர் திறந்து விட பட்டது. அ போது அணையின் ர்மட்டம் 84 அடியாக இருந்தது. அணையில் இருந்து பாசனத்திற்கு தொடர்ந்து த ணீர் திறந்து விட பட்டு வரும் நிலையில் அணைக்கு ர்வரத்து குறைந்து கொ டே வந்ததால் ர்மட்டம் வேகமாக குறைந்தது.

சு ரீம் கோர்ட்டு உத்தரவு

இதையடுத்து கர்நாடக அணைகளில் இருந்து தமிழகத்திற்கு த ணீர் திறந்துவிட நடவடிக்கை எடுக்க வே டும் என்று சு ரீம் கோர்ட்டில் தமிழக அரசு மனுதாக்கல் செய்தது. இந்த மனுவை விசாரித்த சு ரீம் கோர்ட்டு, கர்நாடக அணைகளில் இருந்து தமிழகத்துக்கு வினாடிக்கு 9 ஆயிரம் கனஅடி வீதம் த ணீர் திறந்துவிட வே டும் என்று உத்தரவிட்டது.

இதன்படி, கடந்த 29–ந் தேதி நள்ளிரவு கர்நாடக அணைகளான கபினி, கிருஷ்ணராஜசாகர் ஆகியவற்றில் இருந்து தமிழகத்திற்கு வினாடிக்கு 9 ஆயிரம் கனஅடி வீதம் த ணீர் திறந்து விட பட்டது.

மேட்டூர் அணைக்கு வந்தது

இந்த த ணீர் கடும் எதிர் புகளுக்கு இடையே நேற்று காலை மேட்டூர் அணையை வந்தடைந்தது. அ போது அணைக்கு ர்வரத்து வினாடிக்கு 6 ஆயிரம் கனஅடியாக அதிகரித்தது. இது படி படியாக அதிகரித்து மாலை 4 மணி நிலவர படி 9,222 கனஅடியாக வந்தது.

இந்த ர்வரத்தால் வேகமாக குறைந்து வந்த மேட்டூர் அணையின் ர்மட்டம் தற்போது மெதுவாக குறைந்து வருகிறது. நேற்று மாலை நிலவர படி அணையின் ர்மட்டம் 72.62 அடியாக இருந்தது. அணையில் இருந்து வினாடிக்கு 13,700 கனஅடி வீதம் த ணீர் திறந்து விட படுகிறது.

இதன்காரணமாக தமிழ்நாட்டிலும், புதுச்சேரியிலும் ஒரு சில இடங்களில் இன்று (புதன்கிழமை) மழைபெய் ம். சென்னையில் மழை பெய்ய வாய் பு உள்ளது. நேற்று காலை 8–30 மணி டன் முடிந்த 24 மணிநேரத்தில் திருவள்ளூர் மாவட்டம் பள்ளி பட்டு மற்றும் விழு புரம் மாவட்டம் தி டிவனம் ஆகிய இடங்களில் தலா 2 செ.மீ.மழைபெய்துள்ளது.

இந்த தகவலை சென்னை வானிலை ஆராய்ச்சி ம டல இயக்குனர் எஸ்.ஆர்.ரமணன் தெரிவித்தார்.

**சோனியா காந்தி டன் விவசாய சங்கத்தினர் சந்தி பு சில்லறை வணிகத்தில் அன்னிய முதலீடுக்கு ஆதரவு தெரிவித்தனர்**

ஐக்கிய முற்போக்கு கூட்டணி தலைவர் சோனியா காந்தியை, பாரத விவசாயிகள் சங்க தேசிய தலைவர் புபிந்தர்சிங் மான், பஞ்சா மாநில தலைவர் பல்தேவ் சிங் ஆகியோர் நேற்று சந்தித்து ஒரு மனுவை அளித்தனர். அந்த மனுவில், சில்லறை வணிகத்தில் அந்நிய நேரடி முதலீட்டுக்கு ஆதரவு தெரிவி பதாக கூறி ள்ளனர்.

மேலும், விவசாயிகள் பெரும் கடன் சுமையில் இரு பதால் கடன் தள்ளுபடி, வறட்சி நிவாரணம், பயிர்களுக்கான குறைந்தபட்ச ஆதார விலையை மொத்த விலை அட்டவணை டன் இணை பு ஏற்படுத்துதல், விளைபொருட்களை தடையின்றி ஏற்றுமதி செய்ய அனுமதி, விவசாயத்திற்கு பயன்படுத்த படும் டீசலுக்கு தனி விலை போன்ற கோரிக்கைகளை ம் அந்த மனுவில் கூறி ள்ளனர்.

**ஈரோடு மாவட்டத்தில் கிராமசபை கூட்டங்கள் கலெக்டர் கலந்துகொ டு மக்கள் குறை கேட்டார்**

ஈரோடு மாவட்டத்தில் காந்தி பிறந்தநாளையொட்டி பல்வேறு கிராமங்களில் கிராம சபை கூட்டம் நடைபெற்றது. கெட்டிசமுத்திரத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கலெக்டர் ச முகம் கலந்துகொ டு மக்களிடம் குறைகள் கேட்டார்.

கெட்டிசமுத்திரம்

அந்தியூர் ஊராட்சி ஒன்றியம் கெட்டிசமுத்திரம் ஊராட்சியின் கிராம சபை கூட்டம் புது பாளையம் குருநாதசாமி கோவில் வளாகத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு ஊராட்சி தலைவர் தேவபூரணி தலைமை தாங்கினார். துணைத்தலைவர் மோகன பிரியா முன்னிலை வகித்தார். கோபி ஆர்.டி.ஓ. பழனிச்சாமி, ஈரோடு மாவட்ட சுகாதாரத்துறை துணைஇயக்குனர் டாக்டர் சேகர், ஊரகவளர்ச்சி உதவி இயக்குனர் ரூபன்சங்கர்ராஜ் ஆகியோர் கலந்து கொ டு அரசின் திட்டங்கள் அவற்றை பொதுமக்கள் எவ்வாறு பெறுவது அதற்கு உ டான தகுதிகள் என்ன என்று விளக்கி கூறினார்கள்.

கலெக்டர் பேச்சு

அதைத்தொடந்து கலெக்டர் ச முகம் பொதுமக்களிடம் குறைகள் கேட்டு சிற புறையாற்றினார். அவர்கூறும் பொழுது 'இன்றைக்கு நமக்காக பாடுபட்ட காந்தியடிகளின் பிறந்தநாள். இன்றைய தினத்தில் கிராம சபை கூட்டம் நடைபெறுவது மிகவும் சிற பு வாய்ந்தது. பொதுமக்கள் தங்களின் குறைகளை எல்லாம் எடுத்து கூறினீர்கள். உங்களின் குறைகளை போக்குவது எங்கள் கடமை. உங்கள் கோரிக்கைகள் அனைத்தும் அதிகாரிகளை கொ டு விசாரித்து நடவடிக்கை மேற்கொள்ள படும்' என்றார்.

அந்தியூர் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் சுந்தர், திட்ட இயக்குனர் வித்யாசாகர், உதவி திட்ட அதிகாரி சந்திரன் மற்றும் அதிகாரிகள் ஊர் பொதுமக்கள் கலந்து கொ டார்கள்.

**பழனி பகுதியில் மழை இல்லாததால் த ணீரை விலைக்கு வாங்கி விவசாயம் செய் ம் விவசாயிகள்**

பழனி பகுதியில் மழை இல்லாததால் விவசாயிகள் த ணீரை விலைக்கு வாங்கி விவசாயம் செய்து வருகின்றனர்.

பருவ மழை பொய் பு

இந்தியா முழுவதும் இந்த ஆ டு தென் மேற்கு பருவ மழை போதிய அளவு பெய்ய வில்லை. தமி ழகத்திலும் தென் மேற்கு பருவ மழை பொய்த்து விட்டது. கடுமையான வெயில் அடி பதால் வற ட கால நிலை நிலவி வருகிறது. தி டுக்கல் மாவட்டம் பழனி தாலுகா பா பம்பட்டி, அய் யம்பாளையம், சித்திரைக்குளம், தாதநாயக்கன்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் தக்காளி, மிளகாய், வாழை, தென்னை, ச போட்டா உள்ளிட்ட பல்வேறு பயிர் களை சாகுபடி செய்துள்ளனர்.

இந்நிலையில் மழை இல் லாத காரணத்தால் இ பகுதி யில் நிலத்தடி ர் மட்டம் குறைந்து விட்டது. அனைத்து கிணறுகளும் வற டு காண படுகின்றன. இதனால் அனைத்து பயிர்களும் வாடி வருகின்றன. தென்னை, மிளகாய், வாழை, தக்காளி உள்ளிட்ட பயிர்களை கா பாற்றுவதற்காக விவசாயிகள் த ணீரை விலைக்கு வாங்கி பயிர்களுக்கு பாய்ச்சி வருகின் றனர்.

இ பகுதி விவசாயிகள் தென்னை மரங்களை கா பாற்ற ஏற்கனவே ஆழ் குழாய் போட்டு சொட்டு ர் பாசனம் அமைத்துள்ளனர். தற்போது ஆழ்குழாய் களிலும் குறைந்த அளவு த ணீரே உள்ளது. இதனால் தென்னை மரங்கள் காய்ந்து வருகின்றன.

திரு பூர் மாவட்டம் மடத் துக்குளம் பகுதியில் இருந்து லாரிகளில் த ணீர் கொ டு வர படுகின்றன. ஒரு லாரி த ணீரை விவசாயிகள் ரூ.1,250 கொடுத்து வாங்குகின் றனர். லாரிகளில் கொ டு வர படும் த ணீர் கிணறு களில் விட பட்டு பின்னர் மோட்டார் மூலம் த ணீர் எடுக்க பட்டு பயிர்களுக்கு பாய்ச்ச படுகிறது.

விவசாயிகள் க ணீர்

வட கிழக்கு பருவ மழை முன்கூட்டியே தொடங்கினால்தான் பயிர்களை கா பாற்ற முடி ம் என்றும், தாமதமானால் தென்னை உள்ளிட்ட அனைத்து விவசாய பயிர்களும் கருகும் அபாயம் ஏற்படும் என்றும் விவசாயிகள் க ணீர் மல்க கூறுகின்றனர்.

பழனி மற்றும் தொ பம்பட்டி ஒன்றியத்தில் உள்ள பல்வேறு பகுதிகளிலும் கிணறுகளில் நிலத்தடி ர் மட்டம் குறைந்து வருவதால் விவசாயம் கடுமையாக பாதிக் க பட்டுள்ளது.

**தமிழ்நாடு, புதுச்சேரியில் சில இடங்களில் இன்று மழைபெய் ம் வானிலை மையம் அறிவி பு**

வங்கக்கடலில் ஆந்திரா அருகே உருவான தீவிர காற்றழுத்த பகுதி காரணமாக தமிழ்நாட்டில் திருச்சி, நாகை, தஞ்சை, கடலூர், விழு புரம் முதலிய மாவட்டங்களில் 3 நாட்கள் மழை பெய்தது. ஆனால் தற்போது தீவிர காற்றழுத்த பகுதி வலு இழந்து, காற்றழுத்த தாழ்வு பகுதியாக மாறி உள்ளது.

பருவாச்சி

பவானி அருகே உள்ள பருவாச்சி ஊராட்சியில் கிராமசபை கூட்டம் நடைபெற்றது. ஊராட்சி தலைவர் கிருஷ்ணன் தலைமை தாங்கினார். துணை தலைவர் அய்யாசாமி முன்னிலை வகித்தார். கவுன்சிலர்கள், மகளிர் சுய உதவிக்குழுவினர், பொதுமக்கள் கலந்துகொ டார்கள். முடிவில் ஊராட்சி செயலாளர் ச முகம் நன்றி கூறினார்.

இதேபோல் தொட்டிபாளையம் ஊராட்சி கிராமசபை கூட்டம் எர பநாயக்கன்பாளையத்தில் நடைபெற்றது. ஊராட்சி தலைவர் சவீதா தலைமை தாங்கினார். துணை தலைவர் முனிய பன் முன்னிலை வகித்தார். மயிலம்பாடி சுகாதார ஆய்வாளர் சேது உள்பட பலர் கலந்துகொ டார்கள். முடிவில் ஊராட்சி செயலாளர் மாரிய பன் நன்றி கூறினார்.

மயிலம்பாடி ஊராட்சியில் ஊராட்சி தலைவர் ச முகம் தலைமையில் கிராம சபை கூட்டம் நடைபெற்றது. துணை தலைவர் பழனிச்சாமி, கவுன்சிலர் முருகன், மார பன், சிவச முகம், முருகேசன், ராஜூ, தங்கரோசா உள்பட பலர் கலந்துகொ டார்கள்.

சதுமுகை

சத்தியமங்கலத்தை அடுத்துள்ள சதுமுகை ஊராட்சியில் ஊராட்சி தலைவர் வரதராஜ் தலைமையில் கிராம சபை கூட்டம் நடைபெற்றது. துணை தலைவர் பழனிச்சாமி முன்னிலை வகித்தார். ஊராட்சி செயலாளர் குமார் நன்றி கூறினார். இக்கரைநெகமம் கிராமத்தில் நடைபெற்ற கிராம சபை கூட்டத்திற்கு ஊராட்சி தலைவர் வேலுமணி தலைமை தாங்கினார். துணை தலைவர் ரங்கசாமி முன்னிலை வகித்தார். முடிவில் ஊராட்சி செயலாளர் நாகராஜ் நன்றி கூறினார்.